தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

(கிழமை இதழ்)

தொகுதி-3] திி. பி. 2016 நளி 9 (24-11-1985) 65 காசுகள் [இதழ் எண்: 66] [பகுதி 39-43

ஆசிரியர்களைச் சிறையிலடைப்பது, அறிவைச் சிறையிடுவதாகும்!

ஆசிரியராக இருந்து அமைச்சராக வந்த திரு. அரங்கநாயகத்தின் கண்களை அதிகாரம் மறைப்பதால், உண்மையைக் காண முடியவில்லை!

ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தளைப்படுத்தப் பெற்ற செய்தியைப் பொது மக்களுக்குத் தெரியாதபடி அரசு மூடி மறைப்பது ஏன்?

தொழிலாளர்களை, அடிநிலைப்பிழைப்பாளர்களை, கல்வியாளர்களை நசுக்கிவிட்டு, சாராயக்கடை முதலாளிகளை, திரைப்படக்கயவர்களை வளர விட்டு வரும், கொடுமை அரசு விரைவில் வீழ்ச்சி பெறுவது உறுதி!

மாணவர், மீனவர் எதிர்காலங்களைப் பாழடிக்கவேண்டாம்!

வீணான அடக்குமுறைகளையும், அதிகாரக் கொடுமைகளையும் செய்து வரும் தமிழக அரசுக்குப் பாவலரேறு கடும் கண்டனம்!

ஏறத்தாழ 50 ஆயிரம் உயர் பள்ளி, மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள் கடந்த இரு கிழமைக்கும் மேல் இன்று தமிழகச் சிறைகளில் அடைக்கப்பட்டும் (சில விடங்களில் அடிக்கப்பட்டும்) தம் குடும்பங்களைப் பிரிந்தும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்த பிழைதான் என்ன? அமைச்சர்களைப் போல் கொள்ளையடித்தார்களா, தில்லுமல்லு செய்து வீடுகளாகவும், நிலங்களாகவும், வண்டிகளாகவும் வாங்கிச் செல்வ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? அல்லது சாராயக்கடை முதலாளிகளையும், திரைப்படக் கயவர்களையும் போல், மக்களின் மன மெலிவுகளை (பலவீனங்களை)ப் பயன்படுத்தி, அவர்களைப் பலவகையிலும் சுரண்டி வாழும் கொடுமைகளைச் செய்தார்களா?

நீண்ட நாள்களாகக் கூறிவந்த தங்களின் பத்து உறுப்புக் கோரிக்கைகளுக்காக வேண்டுகோள் விடுத்தார்கள்; அரசு திரும்பிப் பார்க்கவில்லை! போராட்ட எச்சரிக்கை செய்தார்கள்; அமைச்சர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனவே, ஒன்று திரண்டார்கள்; போராடினார்கள்! இந் நடைமுறைகள் தவறு என்றால், அரசுக்குத் தங்கள் வேண்டுகோள்களை, உரிமை உணர்வுகளை, தேவைக் கோரிக்கைகளை எப்படிப் புலப்படுத்துவது? இப்பொழுதைய கல்வி அமைச்சர், முன்னைப்போல் ஆசிரியராகவே இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவரும் போராட்டத்தில் தானே ஈடுபட்டிருக்க வேண்டும்!

போராட்டம் என்றால் என்ன, வன்முறைப் போராட்டத்தையா ஆசிரியர்கள் நடத்தினார்கள்? பொத்தகத்தையும், தூவலையும் தூக்குகின்ற அவர்களின் கைகள் கட்டாரியையும், துமுக்கியையுமா ஏந்தின? ஆசிரியர்கள் எப்பொழுதுமே உலகப் தெரிந்தவர்கள்; நயன்மை, நேர்மை உணர்ந்தவர்கள்; அஞ்சவேண்டுவதற்கு அஞ்சுபவர்கள்; தம்மிடை வந்த மாணவர்களுக்கு, எதிர்காலக் குடிமக்களுக்குக் கல்வியறிவுடன் ஒழுக்கத்தையும், உண்மையையும், பண்பாட்டையும் புகட்டுபவர்கள்; நாட்டின் எதிர்காலத்தையே உருவாக்குபவர்கள்; நாகரிகத்தை வளர்த்தெடுப்பவர்கள்!

இவர்களின் கோரிக்கைகள் எவையே ஆயினும், அவை தனிப்பட்ட ஒருவரின் கோரிக்கை என்று மதிப்பிடப்படலாகாது! போர்ப் படை வீரர்களின் கோரிக்கைகளை அவர்களின் வாழ்வியல் நலன்கள், எவ்வளவில் மதிக்கப்படுகின்றனவோ, அக்கறை செலுத்தப்படுகின்றனவோ, அவ்வளவில் அதற்குக் கொஞ்சமும் குறையாமல், இவ்வாசிரியர்களின் கோரிக்கைகளும், நலன்களும் மதிக்கப்பட வேண்டும்;

[தொடர்ச்சி 3 ஆம் பக்கம் பார்க்க]

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம்; உ. த. மு. க.

திம்புப் பேச்சா? தில்லுமல்லு நாடகமா?

— வள்ளிகேள்வன் —

திம்புப்பேச்சின் தில்லுமல்லுகளைப் பற்றியும் அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நாம் ஆராயும் முன்பு, ஈழவிடுதலைப் போராளிகளைப் பற்றிய இராசீவ்காந்தியின் எண்ணம் எத்தன்மையது என்பதை முதலில் தெரிந்துகொள்வது முகாமையானதாகும்.

எப்பொழுதும் செயவர்த்தனாவுக்கு ஆதரவாகவே செயல்பட்டுவரும் இராசீவ், ஈழப்போராளிகளின் தனித்திலைகளையோ அவர்களது தூய விடுதலைக் கொள்கையையோ ஒப்புக்கொள்ளவே விரும்பாதவர் என்பது மறக்கமுடியாத—மறைக்கவும் முடியாத உண்மையாகும். இந்த உண்மைக்கு அடிப்படைக்காரணிம் என்னவென்றால், ஈழத்தமிழ்ப் போராளிகள் தனிஈழம் கண்டுவிட்டால், தமிழினத்திற்கென்று ஒரு தனி உரிமைநாடு அமைந்ததாகிவிடும். அப்படி அமையாமல் இருக்கவேண்டும் என்பதே இராசீவின் விருப்பமாகும்.

ஈழச்சிக்கலில் இராசீவின் ஒவ்வோர் அணுகுமுறையும் இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும் என்பதை அரசியலறிவு மிக்கார் எளிதில் உணர்ந்துகொள்வர்.

'ஒருவரின் கருத்துகளை மற்றொருவரிடம் கூறும் பணியாளராக நாங்கள் செயல்பட விரும்பவில்லை' என்று இராசீவ் கூறியது ஈழப்போராளிகள் மீதுள்ள வெறுப்பினாலேயே.

மேலும், 'ஓரிடத்தில் அமர்ந்துபேசுவதன்மூலமே இப்படிப்பட்ட சிக்கலுக்குத் தீர்வுகாண முடியும்' என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் இராசீவின் விருப்பப்படி ஓரிடத்தில் (திம்புவில்) அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது சிங்கள அரசு உடன்பாட்டை மீறி வன்முறையில் ஈடுபட்டது. அதுமட்டுமன்று, இன்றுவரையிலும் சிங்களப்படையினர் நிகழ்த்திவரும் இனப்படுகொலைகளுக்கும் கொடுமைகளுக்கும் வரைமுறை என்பதே இல்லாது போய்விட்டது.

அன்றுமுதல் இன்றுவரையிலும் சிங்களப் படையின் மீறல் நடவடிக்கைகளுக்கு எந்த வகையான மறுநடவடிக்கையும் இராசீவால் எடுக்கப்படவேயில்லை. வெறும் வாய்மொழியிலான கண்டனங்களை, இனவுணர்வுள்ள எந்தத் தமிழனும் ஒப்புக்கொள்ள அணியமாயில்லை.

ஒருபுறம் ஈழவிடுதலைப் போராளிகளின்மீது அடக்குமுறைச் செயற்பாடுகள். மறுபுறம் சிங்கள அரசின் இனப்படுகொலைகளுக்கு வெறும் வாய் தடைப்புக் கண்டனங்கள்.

இன்னும் இராசீவ்காந்தி எத்தனைமுறை பேச்சு நடத்துவது? புதிய புதிய சமன்மைத்திட்டங்களை உருவாக்குவது? இவற்றால் ஈழத்தமிழரும் காப்பாற்றப்படப் போவதில்லை. இராமேசுவரத் தமிழ் மீனவர்களின் வாழ்வும் விடியப் போவதில்லை.

செயவர்த்தனாவின் இன அழிப்புக் கொடுங்கோன்மையை மூடிமறைக்கவே முயலும் இராசீவ், அதை உலக அரங்கில் ஒப்புக்கொள்ளவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. இனி எந்தவகையான அரசியல் வலக்காரங்களின் மூலமாகவும் மறைத்துவைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்ட பிறகு அரைமனமாக—ஆம் அரைமனமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

குவைத்து நாட்டிலுள்ள 'அல்சேய்சா', 'அராபு டைம்சு' தாளிகைகளின் ஆசிரியர் அகமதுசாரல்லவுக்கு அளித்த நேருரையில்,

'உலகம் முழுவதிலும் இருந்து நமக்கு வரும் செய்திகள், தாளிகைச் செய்திகள் ஆகியவை இலங்கை அரசு கூறுவதற்கு மாறாக இருக்கிறது' என்று உண்மையை ஒப்புக்கொண்டாலும் அந்தநிலையில் கூட, செயவர்த்தனாவிற்கு ஆதரவாகவே பேச விரும்புகிறார்.

எப்படியெனில், 'இலங்கையின் உண்மையான சிக்கல் வன்முறைதான். அதைத் தமிழ்ப்போராளிகள்தாம் தூண்டிவிட்டனர் என்றாலும் வன்முறை நிகழ்ச்சிகளில் பெரும்பகுதி சிங்களப் படையினரால் தாம் நடத்தப்பட்டிருக்கிறது' என்று நேருரையில் கூறியுள்ளதை நோக்கும்போது நமக்குப் புலப்படும்.

இலங்கையில் நடப்பது விலங்குத்தனத்திற்கும் கீழான, நயன்மையற்ற இன அழிப்பு வேலை என்பதை அறிந்திருந்தும், அதை வெறும் வன்முறை என்று குறிப்பிடுகிறார். அவ்வாறு குறிப்பிட்டு அதை ஈழப்போராளிகளே தூண்டிவிட்டனர், என்று கரவாகக் கூறுவது, செயவர்த்தனாவைக் காப்பாற்றும் முயற்சியே என்பது தெளிவு.

திம்புப்பேச்சு முறிவிற்குப் பிறகு இன்றுவரையிலும் நடந்த நிகழ்ச்சிகள்கூட மிகக் கொடுமையானவையும் அரத்தத்தை உறையவைக்கும் தன்மையனவும் ஆகும்.

1. இலங்கையில் தமிழர் பகுதிகள் செயலற்று இருப்பதாகவும், கடைகள் அடைக்கப்பட்டும், போக்குவரத்து தவிர்க்கப்பட்டும் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டும் இருப்பதாகவும் மீன்பிடி தொழில் நடைபெறவில்லை என்றும் தப்பிவந்த ஈழத்தமிழர்கள் கூறுகிறார்கள்.

2. வெலிக்கடை, அனுராதபுரம், நெகோம்பு, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள ஐந்து சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சிறையாளிகளின் நிலை மிகவும் கீழ்மையாக இருக்கிறது. போதுமான உணவு வழங்கப்படுவதில்லை. வழங்கப்படும் உணவும் தகுதியற்றதாக உள்ளது. உடைமாற்றக் கூட ஒப்புதல் கிடையாது.

3. இசுரேலிய கொலைப்படையான 'மொசாத்' படையினர் திரிகோணமலையில் தாவடியிட்டு (முகாமிட்டு)த் தமிழர்களைப் பூண்டோடு அழிக்க வழிமுறைகள் வகுத்துத் தருகிறார்கள்.

4. திரிகோணமலைப் படுகொலையின் காரணியமாக 20 தமிழர்கள் கொல்லப்பட்டும் 45 வீடுகள், 25 கடைகள் சிங்களர்களால் பாழ்படுத்தப்பட்டும் உள்ளன. இதைத் தொடர்ந்து ஆறாயிரம் தமிழர்கள் ஏதிலிகளாகப் பள்ளிகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

5. யாழ்ப்பாணம் நோக்கி 35 வழிப்போக்கர் (பயணி)களுடன் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றை, 'இசப்பத்தை' என்னுமிடத்தில் வழிமறித்துக் கடத்திய சிங்கள வெறியர்கள் அரசுத்தகாமா என்ற சிற்றூரில் எரிநெய் (டீசல்) ஊற்றித் தீ வைத்துக் கொளுத்தினார்கள். வழிப்போக்கர்(பயணி)கள் அனைவரும் மடிந்துவிட்டனர்.

6. அடர்ந்த மரங்கள் நிறைந்த வவுனியா காட்டிற்குள் பதுங்கியிருக்கும் தமிழ் ஏதிலிகள் உண்ண உணவுகூட இல்லாமல் வாடுகின்றனர். அவர்களையும் சிங்களப் படையினர் விடவில்லை. காடுகளைச் சுற்றிவளைத்துத் தாக்கியும் இறகூர்தியில் (எலிகாப்டர்) தாழ்வாகப் பறந்து குண்டுமழை பொழிந்தும் தாக்கினர். இதனால் அதிகமானபேர் இறந்திருக்கிறார்கள் எனினும் 16 பிணங்கள் மட்டுமே சிதறிக்கிடப்பது தெரிந்தது.

7. வவுனியாவிற்கு அருகில் உள்ள வானூர்தித் தளத்தைப் புதுப்பிக்கவேண்டும் என்றுகூறி, வவுனியாவில் 50 ஆயிரம் தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற முனைந்துள்ளனர் சிங்களப்படையினர்.

இத்தனைக் கொடிய கொலை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும்போது, இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள் :

'இலங்கையில் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது, கொள்ளையடிப்பது, தீவைப்பு நிகழ்ச்சிகள் குறித்து இந்தியா ஆழ்ந்த வருத்தமும் கவலையும் தெரிவித்துள்ளது. இலங்கையில் நிலைமையைக் கட்டுப்படுத்தவும் பொதுமக்கள் நலனைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக செயவர்த்தனா மறுமொழி தந்துள்ளார்......நிலைமை சீரடையும் என்று நம்புகிறோம்'.

இந்திய அரசின் இந்த அறிக்கை வெறும் கண்துடைப்பு என்பதைத் தற்குறிகூட உணர்ந்து கொள்வானே. அங்கே தமிழன் உயிருடன் எரிக்கப்படுகிறான்: இங்கே இந்தியா, நிலைமை சீரடையும் என்று நம்புகிறதாம்!

மொத்தத்தில் ஈழச்சிக்கலை இந்தியா தீர்த்து வைக்கும் என்பது, 'ஆட்டைப் புலியிடமிருந்து காப்பாற்றுவதாக ஓநாய் கூறுவதற்கு' ஒப்பானதேயன்றி வேறன்று.

இராசீவின் நோக்கமெல்லாம் இலங்கையுடனான நட்புறவை வலுப்படுத்திக்கொள்வதுதான். இதை அடிக்கடி அவரே வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

அண்மையில் இராமேசுவரம் கடற்பகுதிக்குள் எல்லை மீறி நுழைந்த சிங்களப்படையினர், தமிழ் மீனவர் ஒருவரின் வயிற்றைக் கொக்கிபோட்டு இரண்டாகக் கிழித்தனர். இக் கொடுமையான வன்முறை நிகழ்ச்சி சூலை 27-ஆம் பக்கல் நடந்தது. வயிறு கிழிக்கப்பட்ட தமிழ் மீனவர் மிகவும் ஏதப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆகத்து 3-ஆம் பக்கல் இந்தியக் கடற்பகுதிக்குள் எல்லை மீறி நுழைந்ததாக மூன்று இலங்கை மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் உசாவலுக்குப் பின்னர் படகுகள் திசைமாறி வந்தன என்றும் இருநாடுகளின் நட்புறவு காரணியமாகவும் உடனடியாக விடுவிக்கப்பட்டன.

(படகுகள் ஏன் விடுவிக்கப் படவேண்டும்? சில நாட்களுக்கு முன்பு தமிழ் மீனவர் வயிறு கிழிக்கப்பட்டதற்குப் பொறுப்பேற்கும்படி சிங்கள அரசை வற்புறுத்தியிருக்கலாமில்லையா?

(தொடரும்)

இன்னமும் போராளிகளை இந்தியா நம்பவில்லையே!

குமுதத்திற்கு ஒரு மறுப்பு மடல்!

குமுதம் ஆசிரியர் அவர்களுக்கு,

கடந்த 26-9-1985 ஆம் பக்கலிட்ட குமுதம் இதழில் ''சிந்தித்துப் பார்க்க வேண்டும்'' என்ற தங்கள் ஆசிரியவுரையில், 15-9-1985 அன்று சீரணி அரங்கில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ''நமக்குத்தான தனிநாடு கேட்க முடியவில்லை. ஈழத் தமிழர்களாவது தனிநாடு பெறட்டும் என்ற ஏக்கம் ஏற்படுகிறது'' என்று அன்பழகன் பேசியிருக்கிறார்.

''அவர் பகுத்தறிவாளர் என்பது உலகறிந்த உண்மை. தமிழ்-ஈழம் என்பது தனிநாடாகத் திகழ முடியும்'' என்று அவரது பகுத்தறிவு கருதுகிறதா?

இலங்கையின் பரப்பளவு என்ன? தமிழ் ஈழம் என்று சொல்லுகிறார்களே அஃது எத்தனைச் சதுரக்கற்கள் கொண்டது? அதன் இயற்கை வளம் என்ன? என்னென்ன தொழிற்சாலைகள் உள்ளன? என்ன பொருள்கள் உருவாக்கப் பெறுகின்றன? அயல்நட்டிற்கு என்ன பொருள்கள் அதனால் ஏற்றுமதி செய்ய இயலும்? அதன் பொருள் நிலைமை எப்படி இருக்கும்? மக்கள் தொகை எவ்வளவு? தன்னைத்தானே காத்துக்கொள்ளும் ஆற்றல் அதற்கு உண்டா?

தமிழ் ஈழம் தனி நாடாக இயங்கவேண்டும் என்று ஆசைப்படு முன் அன்பழகன் - பகுத்தறிவாளர் கட்டாயம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று புலம்பியிருக்கிறீர்கள்.

அன்பழகனைச் சிந்திக்கச் சொல்வதற்கு முன், உம்மைப் போன்ற மடமூடங்களுக்கு ஒரு சிறு விளக்கம்.

நெதர்லாந்து அரசின் கீழ் ஒரு மாநிலமாக இயங்கிவந்த அருபா வருகின்ற புத்தாண்டு (1986) சனவரித் திங்கள் முதல் நாள் அன்று, முழு உரிமை பெற்ற புதிய தனி நாடாக மலர்கிறது.

மலரும் புதிய நாட்டின் பரப்பளவு 195 சதுர அயிரமாத்திரிகள்தாம். மக்கள் தொகையோ 70,000 தான்.

ஆனால், மலரவிருக்கின்ற தமிழ் ஈழத்தின் பரப்பளவோ 25,000 சதுர அயிரமாத்திரிகள் (கிலோ மீட்டர்கள்). மக்கள் தொகையோ 40,00 000.

தமிழீழத்தை விடப் பரப்பிலும், மக்கள்தொகையிலும் மிக மிகக் குறைந்த நாடுகள் பல இருப்பது உமக்குத் தெரியாதா?

ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் தங்கள் கணவர்கள், பெற்றோர்கள் முன்பாகவே, சிங்களக் காட்டு விலங்காண்டிகளால் கற்பழிக்கப்பட்டதையும், ஆயிரக் கணக்கான குழந்தைகள் தீயிலிடுக் கொல்லப்பட்டதையும் ஆயிரக் கணக்கானோர் உயிரோடு மண்ணில் புதைக்கப் பட்டதையும், பல்லாயிரக் கணக்கானோர் உறுப்புச் சிதைவுக்கு உள்ளாக்கப்பட்டதையும், இலக்கக் கணக்கான தமிழ்க் குடும்பங்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு, வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டதையும் மறந்து, அன்பழகன் போன்றவர்களைச் சிந்திக்கச் சொல்வதும், எச்சில் காசுக்கு ஏங்கித் தேசியம், ஒருமைப்பாடு என்று கூப்பாடு போட்டு, மக்களைக்குழப்பி, அவர்களின் விழிப்புணர்ச்சியை மழுக்கி, உணர்வெழுச்சியை அடக்கிவிட எண்ணுவது வேடிக்கையாகவும் வியப்பாகவும் உள்ளது!

உம்மைப் போன்று அடிமை உணர்வில் ஊறிப் போய் உடனிருந்தே கொல்லும் இன இரண்டகர்களை விட செயவர்த்தனா போன்ற கொடிய காட்டு விலங்காண்டிகளே மேல்.

தங்களைப் போன்ற இன வஞ்சகர்களாலும், காட்டிக் கொடுக்கும் கயவர்களாலும், உலகில் பல தேசிய இனங்கள் விடுதலைபெற இயலாமல் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றன.

தேசிய இனங்களின் எழுச்சியை ஒருபோதும் அடக்கிவிட முடியாது. இனியாவது இதை உணர்வது நல்லது

—ப. இராசாமணி, சென்னை-13.

"தென்மொழி"

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	18 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3.00 ,,	4.00

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க,

தென்மொழி, 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 66 (24-11-1985) [பகுதி-39-43]

ஆசிரியர்களைச் சிறையிலடைப்பது, அறிவைச் சிறையிலடைப்பதாகும்!

பாவலரேறு கடும் கண்டனம்!

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்கறை செலுத்தப்பட வேண்டும். அந்த அளவில் ஆசிரியர்கள் முகாமையானவர்கள் என்பதை முன்னாள் பள்ளிக்கூட ஆசிரியரான கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் உணர்ந்திருக்க வேண்டும். ஆனால், ஏதோ நம் நாட்டின் அறியாமையும், அடிமைத்தனமும் நிறைந்த போக்கால் ஆசிரியர்கள், படைத்துறை வீரர்களை விட, காவல் துறையினரைவிடத் தாழ்வாக மட்டுமன்றிக் கீழாகவும் மதிக்கப்படுகிறார்கள்.

படைத் துறையில், காவல் துறையில் உள்ளவர்கள் பாதுகாப்பது விலங்குகளை அன்று, மக்களை! அந்த மக்களை உருவாக்குவதிலும், உயர்வேற்றுவதிலும் பொறுப்பைத் தாங்குபவர்கள் ஆசிரியர்கள்! இனி, இன்னுஞ் சொன்னால் நாட்டைப் பாதுகாக்கும் படையினரை விட, மக்களைப் பாதுகாக்கும் காவலரை விட, மக்களை உருவாக்கும் ஆசிரியர்களே சிறந்தவர்கள் என்பதை இப்பொழுதுள்ள அதிகார வெறிபிடித்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். இனி, இன்னமும் சொல்லவேண்டுமானால், ஆசிரியர்கள், நாட்டில் உள்ள அனைத்துப் பணித்துறையினரிலும் முதன்மையானவர்கள்; உயர்வான பொறுப்புடையவர்கள்! மாந்த உயிரின் படிநிலை வளர்ச்சிக்கே உதவுபவர்கள்! அவர்களின் பணி சிறப்பாக நடைபெறுவதற்குத் தடையிருக்குமானால், மக்களெல்லாரும் வெறும் விலங்குகளாகத்தான் நடமாட வேண்டியிருக்கும். அதனால்தான் தமிழ்ச் சான்றோர்கள் ஆசிரியர்களை 'இறைவன்' என்றும், பெற்றோர்களுக்கு அடுத்து வைத்தும் போற்றினார்கள். உண்மையாகக் கூறவேண்டுமானால், இறைவனுக்கும் மேலாக வைத்துப் போற்றப் பெற்றார்கள் ஆசிரியர்கள் என்றே கூற வேண்டும்.

இத்தகைய பெருமைக்குரிய ஆசிரியர்களைக் குமுகாய கொடியவர்களைப்போலவும், குற்றவாளிகளைப்போலவும் கருதி, அவர்கள் தங்களுக்குரிய உரிமைகளை, மக்களாட்சி முறையில் புலப்படுத்தியிருக்க, அவர்களைச் சிறையிலடைத்து வைத்திருப்பதும் அவர்களை மிரட்டுவதுபோல, அவர்கள் தங்கள் போராட்டத்தைத் திரும்பப் பெறவில்லையானால், அவர்களுக்கு மாற்றாக வேற்று ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று கல்வியமைச்சர் அச்சுறுத்திப் பேசியிருப்பதும் பொறுத்துக்கொள்ள முடியாத கொடிய நடைமுறையும் அணுகுமுறையும் ஆகும்.

மேலும், சிறைப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்குச் சிறைச்சாலைகளில் போதிய அடிப்படை வசதிகள்கூட செய்துதரப்பெறவில்லை என்பதைக் கேள்விப்படுகிறோம். சேலம் முதலிய சிறைச்சாலைகளில் ஓரிரண்டு ஆசிரியப் பெருமக்களும் உள்ளேயே மடிந்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். ஆசிரியர்களைத் தளைப்படுத்தியிருப்பதால் பள்ளிகளும் நடைபெறாமல் பல ஊர்களில் மூடப்பட்டுக்கிடக்கின்றன. இதுபோலவே அரசு அண்மையில் மீனவர்களிடத்திலும் பல வாழ்வியல் தாக்கங்களைச் செய்துள்ளன. அவர்களின் வாழ்க்கைக்கு வழிவகுக்காமல் இதுநாள்வரை அவர்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் உரிமைகளை, வெறும் ஆடம்பர அமைப்புக்காகத் தட்டிப் பறித்திருக்கிறது. இத்தகைய கொடுமையான சில நிகழ்ச்சிகள் நாட்டின் எதிர்காலத்தையே மிகுவாக ஊறுபடுத்துவனவாகும்.

சிறைப்படுத்தப்பட்ட பெருமைக்குரிய ஆசிரியர்களுள், பல்லடம், திருவாளர், தென்மொழி முத்துக்குமரனார், திருவாட்டி சேதுகா முத்துக்குமரனார், திருப்பூர், திருவாளர் தென்மொழி துரையரசனார், மணப்பாறை திருவாளர் நாவை. சிவம் நெமலி, மா. செ. தமிழ்மணி, தாராபுரம் சீரங்கராயன் போன்ற ஏராளமான உ.த.மு.க. தென்மொழி அன்பர்களும் இருப்பதறிந்து, தமிழ்நிலம் மிகவும் பெருமையும் பெருமிதமும் கொள்கிறது. அவர்களையும் அவர்களைச்சார்ந்த ஆசிரியப் பெருமக்கள் பிறரையும் அவர்களின் நேரிய போராட்டத்திற்காக மிகவும் பாராட்டுகிறோம்.

அவர்களின் பத்துக் கோரிக்கைகளுள் எதுவும் நயன்மையற்ற, நடைமுறைக்குக் கடினமான கோரிக்கை என்று கூறிவிட முடியாது. அவற்றை மனநிறைவோடு ஏற்றுச் செயற்படுத்துவதில் அரசுக்குப் பெரிய செலவுகள் ஏற்பட்டுவிடும் என்றும் கருதிவிட முடியாது. பத்துக் கோரிக்கைகளுள்,

மாநகராட்சி, நகராட்சி, தனியார் நடத்தும் பள்ளிகள் இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாகக்

(மூன்றும் பத்தி பார்க்க)

எழுத்துச் சீர்திருத்தத்தை 'தமிழ்நிலம்', 'தென்மொழி' கடைப்பிடிக்காதது ஏன்?

— பாவலரேறு விளக்கம் —

தமிழ் மொழிச் சீர்திருத்தமே, 'தமிழ்நிலத்'தின் முதற் கொள்கை! மொழி இருந்தாலன்றோ எழுத்திருக்கும். எழுத்திருந்து மொழியில்லாமற் போயின் என்ன பயன்? மொழிச் சீர்திருத்தத்தை, எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் ஏற்றுக் கொள்ளும் போது, 'தமிழ்நில'மும் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும். நீங்களெல்லாம் மொழியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே, 'தமிழ் நிலம்' எழுத்துச் சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கிறது. பார்ப்பனீயத்தைப் பிறவற்றிலெல்லாம் எதிர்க்கின்றவர்கள் மொழியில் மட்டும் அதை வரவேற்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அஃது அறிவுக்குப் பொருந்தியது என்று ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை. பார்ப்பனீயம் இல்லாமல் தமிழன் வாழமுடியும் என்றால், அவன் மொழியாகிய சமசுக்கிருதம் இல்லாமல் தமிழ் மட்டும் வாழ முடியாதா என்ன? பார்ப்பனீயம் கசக்கிறது! அதன் மொழி மட்டும் இனிக்கிறதோ?

மொழியைத் திருத்திக் கொள்ளாமல், எழுத்தை மட்டும் திருத்த முற்படுவது ஒரு போலிச் சீர்திருத்தமே! அதனால் தமிழ்மொழிக்கு முழுப்பயன் ஏற்பட்டுவிடாது. உடலில் உள்ள நோயைப் போக்கிக் கொள்ள முற்படாமல் வெறும் சட்டையைமட்டும் மாற்றிக் கொள்வதில் கவனம் செலுத்துவதைப் போன்றது அது. எடுத்துக் காட்டாக, 'சுவாமிநாதன்' -என்ற பெயரைப் பாருங்கள்! அதில் தமிழ் எழுத்துத்தான் உள்ளது! ஆனால், ஆரிய அடிமைத்தனம் உள்ளதே! அந்த இழிவைப்பற்றி நீங்கள் சிந்திக்கவில்லையே! அதைப்பற்றிய உங்கள் சிந்தனையை வளர்ப்பதற்காகவே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நாங்கள் செயலுக்குக் கொண்டுவரவில்லை. மற்றபடி நாங்கள் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இல்லை. முதலில் செய்வது எது, இரண்டாவதாகச் செய்வது எது என்பதில் நாங்கள் கருத்தூன்றிக் கொண்டிருக்கிறோம். இரண்டாவதைச் செயலுக்குக் கொண்டு வரும்பொழுது, முதலாவது புறக்கணிக்கப்பட்டு விடும் என்பது குமுகாய மனவியல்! யானை வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் நாங்கள்! எதிரில் வரும் பூனையின் பின்னால் செல்ல விரும்பவில்லை! அஃது இழிந்தது - ஏமாற்றம் தருவது அல்லது ஏமாறுவது. - தமிழ்நிலம் [26-11-85]

இந்தியாவைத் தாக்கும் குண்டு...!

பாக்கிசுத்தான் அணுகுண்டு செய்வதாக இராசீவ் காந்தி அடிக்கடி இந்திய மக்களை அச்சுறுத்தித் தம் எல்லா முயற்சிகளுக்கும் ஏற்ற ஒத்துழைப்பைக் கோருகிறார். தேசிய ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்க்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கிறார்.

பாக்கிசுத்தான் அணுகுண்டு செய்வது ஒருவேளை உண்மையாகக்கூட இருக்கலாம், ஆனால், நாம் கேட்கிறோம்.

''பாக்கிசுத்தானில் செய்யப்படும் குண்டுகளில் ''இந்தியாவைத் தாக்கும் குண்டு' என்று ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா, என்ன? பின் ஏன் இப்படி வீணாக மக்களை அச்சுறுத்த வேண்டும்?''

இந்த ஆண்டு பிப்ரவரித் தொடக்கத்தில், போர்த்துக்கலிலிருந்து இலங்கைப் படைத் துறைக்குப் படைக் கருவிகளை ஏற்றிக் கொண்டுவந்த ஒரு வானூர்தி, திருவனந்தபுரத்தில் கன்னெய (பெட்ரோல்) இல்லாமல் தரையிறங்கியது.

419 கொடுமையான கருவிகளும், 15,209 கிலோ எடையுள்ள வெடி மருந்துகளும், லிசுபன் நகரில் வானூர்தியில் ஏற்றி அனுப்பப்பட்டிருந்தன.

இதுபற்றித் தமிழக மக்கள் அனைவரும், ''இவ் வானூர்தியை இலங்கைக்கு அனுப்பக்கூடாது. அதிலுள்ள குண்டுகள் தமிழினத்தை அழிப்பதற்காகக் கொண்டு செல்லப்படுபவை'' என்று அச்சக் குரல் கொடுத்தனர்.

அப்பொழுது ராசீவ் காந்தி என்ன கேட்டார்? ''அந்தக் குண்டுகளில் தமிழர்களைக் கொல்லும் குண்டுகள் என்று எழுதப்பட்டா இருந்தது?'' என்று ஏளனமாகக் கேட்டதுமல்லாமல், அந்த வானூர்தியை முழு எரிபொருள் போட்டு இலங்கைக்கு விடுவித்தா

எனவேதாம் இப்பொழுது நாம் கேட்கிறோம், 'பாக்கிசுத்தானில் செய்யப்படும் அணுகுண்டுகளில், இந்தியரைக் கொல்லும் குண்டு' என்று எழுதப்பட்டிருக்கிறது?''

இராசீவ் காந்தி விடை சொல்லட்டும்.

(1 ஆம் பத்தித் தொடர்ச்சி)

கருதவேண்டும்' — என்பதும்,

'பட்டம் பெற்ற ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் போன்ற அனைவர்க்கும், பணியில் சேர்ந்த நாள் முதலே பணியுறுதி செய்யவேண்டும்' — என்பதும்,

'தொடக்கக் கல்விக்குத் தனி இயக்குநர் அமர்த்தப்பெறல் வேண்டும்' -என்பதும்,

'பள்ளிக் கட்டடங்கள் அனைத்து நிலையிலும் சீராக்கப்பெறல் வேண்டும்' — என்பதும்,

ஆகிய கோரிக்கைகள் பொருள் செலவற்றனவும் ஆளுமை நலம் கருதியனவும், மாணவர் பயன் கொண்டவையுமே ஆகும். இவற்றை உடனே ஏற்றுக்கொள்வதில் அரசுக்கு ஒரு பெருமைக்குறைவோ, இழப்போ ஏற்படப்போவதில்லை. மற்ற கோரிக்கைகளும் நீண்ட காலமாக ஆசிரியர்களுக்கேற்பட்ட வாய்ப்புக் குறைவாலும், ஒரவஞ்சனையாலும் எழுப்பப்பெற்றவையே! அவற்றை ஏற்றுக்கொள்வதிலும் அரசுக்கு அப்படியொன்றும் பெருஞ்செலவு ஏற்பட்டுவிடும் என்று கருதுவதற்கில்லை.

ஏனோ தெரியவில்லை, அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமான ஆசிரியர்களின் குரல்வளைகளை அதிகாரக் கைகளைக்கொண்டு அரசு நெரிக்கின்றது. அவர்களின் எழுச்சியைச் சிறைச்சாலைகளில் வைத்துப்பூட்டுவதால் நசுக்கிவிடப் பார்க்கிறது. இது மிகவும் கொடுமையான நடைமுறையும், கடுமையான அணுகுமுறையும் ஆகும் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இவற்றை அரசு தொடர்ந்து செய்வதால் ஓர் அழியாத பழியை அவர்கள் ஏற்க வேண்டியிருக்கும். அதன் விளைவு ஆட்சியிறக்கமாகவும் இருக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறோம். ஆட்சியாளர்கள் நல்லவர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் கொடியவர்களாக இருந்தார்கள் என்று எதிர்காலம் மதிப்பிடும்படி நடந்து கொள்ளக்கூடாது. இவ்வகையில் அரசை மிகவும் கடுமையாகக் கண்டிக்கிறோம். விரைவில் நல்விளைவுகளுக்கு அரசு வழி வகுக்குமாக!

'குடிகொன்று இறைகொள்ளும் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலும் மாண்பே!'
(நீதி நெறிவிளக்கம். 28)

'கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு'. (893)

நம் முகவர்களுக்கு எச்சரிக்கை!

கடுமையான பொருளியல் இடர்ப்பாட்டிலும், வினைய முத்தங்களிலும் உழன்று 'தமிழ்நிலத்'தை மொழி, இன, நட்டளவில் விடுவிப்பதையே நம் உயிர்க் கொள்கையாகக் கொண்டு, கடந்த 26 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் 'தென்மொழி' இதழுக்கும், 'தமிழ் நிலம்', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களுக்கும் முகவராய் இருக்கும் நம் அருந்தமிழ் நெஞ்சங்கள் பல, நம்முடைய இக்கட்டையும், இடர்ப்பாட்டையும் செவ்வனே உணராமல் அலுவலகத்தினரும், ஆசிரியர் அவர்களும் விடுத்திருந்த மடல்களையும் பொருட்படுத்தாமல், பட்டியல் தொகைகளை அனுப்பாமலே இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

இறுதியாக ஆசிரியர் அவர்கள் விடுத்திருந்த 'எச்சரிக்கை மடலு'க்குப் பின்னும், தொகை அனுப்பாமல் இருக்கும் நன்னெஞ்சங்கள், இச்செய்தியினைக் கண்டும் விடுவிக்கவில்லையாயின், இவ்விதழை அடுத்து வருகின்ற 'தமிழ்நிலம்', 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களில், அவர்களின் பெயர்களைத் தெளிவாக வெளியிடவேண்டி வரும் என்பதை, எச்சரிக்கையுடனும், வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்!

— அமைச்சர்.

ஆசிரியர்களை உடனே விடுதலை செய்க!

தந்தை பெரியாரின் தலையாய கொள்கை தனித் தமிழ்நாடு பெறுவதே!

(தந்தை பெரியாரின் 95 - ஆம் பிறந்த நாள் அறிக்கை இது.
— தூய தமிழ்ப்படுத்தி வெளியிடப் பெறுகிறது.)

எனது 95 ஆண்டு பிறந்தநாள் தொடக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுத வேண்டி இருக்கிறது. அதை முன்னிட்டு இக் கட்டுரை எழுதுகிறேன். அப்படி எழுதப்படும் இக் கட்டுரை என்றால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியாக கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால், அடுத்த ஆண்டு மலர் எழுதப்படவேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ - இல்லையோ என்கிற சிக்கல் மாத்திரம் அல்லாமல், எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ இருக்காதோ என்பதே முக்கிய காரியமாகும்.

ஏனெனில், இன்னும் நாம் இருப்பது போலவே அஃதாவது, இந்திய ஆட்சி என்பதற்குள் குடிமக்களாகவும், குமுகாயத்தில் நாலாஞ்சாதி (சூத்திர மகனாகவும்) சட்டப்படி, சாத்திரப்படி பார்ப்பானின் 'வைப்பாட்டி மகன்' என்னும் பெயருடன் நமது தாய்மார்கள் பார்ப்பானின் விலைமகள்களாகவும் இருக்கும் தன்மையாலேயே இருப்போமா? என்கிற கருத்தைக்கொண்டே இப்படி எழுதுகிறேன்.

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் குடிகளாய் இருக்கும் வரை இந்துவாய், அஃதாவது, கிறித்தவனாகவோ, முசுலீமாகவோ நாம் மதம் மாற்றிக் கொள்ளாதவரை, நாம் நமது பண்டார மடத் தலைவர்கள் உட்பட பௌத்தனுக்கும் -செயினனுக்கும் இணையாக இருக்கும்படியாக இருந்தாலும், பகுத்தறிவுக்காரர்களாய் இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்து வருபவர்களாக இருந்தாலும் சூத்திரனாகத்தான்-பார்ப்பானின் வைப்பாட்டி மகனாகத்தான் இருந்தாகவேண்டும்.

இதுதான் இன்றைய இந்திய அரசியல் சட்டம் ஆகும். இந்தச் சட்டத்தைத் திருத்தவோ-மாற்றவோ நம் மக்களுக்கு ஒருநாளும் ஆற்றலோ, உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அதுமாத்திரம் அல்லாமல், இந்திய ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டை விலக்கிக் கொள்ள முயற்சி செய்து ஆகவேண்டிய ஒரு கட்டாயமான -அழுத்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பதுபற்றி நமக்கு முடிவு செய்துகொள்ள முடியாமல் இருந்தாலும், இம் முயற்சியில் நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயே தான் இந்தப்படி எழுதுகிறேன்.

நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் சிக்கல் எப்படி இருந்தாலும், குமுகாயச் சிக்கலில் நாம் இன்று இருக்கும் இழிதன்மையில் இருந்து, அஃதாவது, சூத்திரனாக, வைப்பாட்டி மகனாக, நம் தாய்மார்கள் வைப்பாட்டிகளாக சட்டப்படி, சாத்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சி செய்யாமல் நாம் இருக்கமுடியுமா?

இந்தியாவில் நாம் இருக்கும் வரை, இந்துவாகத்தானே இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே முசுலீம், கிறித்தவம் தவிர மற்ற யாவரும் சூத்திரர், 'தாசி' மக்கள்தாம் என்று இருப்பதால் ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களாக ஆவார்கள்.

ஆதலால், நாம் உடனடியாக விடுதலை அஃதாவது, இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகி விடுதலைத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இம் முயற்சிக்கு இன்றைய தி.மு.க. ஆட்சி இணங்கும் என்று கருதமுடியாது. ஏனெனில், தி.மு.க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்தியக் கூட்டாட்சி ஆளுமைக்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சிதான் அது விரும்புகிறது.

மாநிலத் தன்னாட்சி என்றால், அரசியலில் தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்துகொள்ள முடியுமே தவிர, குமுகாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு மாறாக, ஒரு செயலையும் செய்ய முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் குமுகாய (மத)த் தொடர்பான செயல்களைப்பற்றி பழைய மனு (அ)தர்ம நிலையை மிக மிக வலப்படுத்திக்கொண்டபடி இருக்கிறது: எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால், கருப்பக் கிரகத்திற்குள் சூத்திரன், அஃதாவது, பண்டார மடத்தலைவர் உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்லமுடியாது என்று மேல் உயர்நெறி (சுப்ரீம்) மன்றத் தீர்ப்பு இருப்பதனாலும், இன்னும் கோயிலுக்குச் சாமி கும்பிடுவதற்கென்று போகும் யாருமே தீண்டத் தகாதவர்கள்போல் வாயிற்படிக்கு வெளியில்தான் எட்டி நிற்கவேண்டும் என்றால், மற்றபடி எதில் நாம் மாறுதலைக் காண முடியும்?

இன்று நடைமுறையில் இருக்கும் "இந்து லா" என்னும் சட்டத்திலும், பல உயர்நெறி மன்றங்களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர்களை மிக மிக இழிவாகக் கூறி, நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்குச் சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால், கிறித்தவர்கள் - முசுலீம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள் ஆவார்கள். இதன்படி நாத்திகன், பகுத்தறிவுக்காரனை, 'பரதேசி' முதலிய அனைவரும் இந்துக்களாகி சூத்திரர், பார்ப்பானின் 'தாசி' மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

நான் முதலில், 'நான் இந்து அல்லன்' என்று சொல்லிவிட்டால், இழிவு நீங்கிவிடும் என்றுதான் கருதினேன். பிறகு, சட்டங்களைப் பார்க்கத் தொடங்கிய பிறகு கிறித்தவர்கள், முசுலீம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள்- இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், 'வேசி' மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே, தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம்நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முதன்மையான கவனம் இருக்கிறது. அன்றியும், நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே அச்சப்படுகிறார்கள்: காரணம் பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்லவேண்டுமே என்றும் அச்சப்படுகிறார்கள். 50 ஆண்டுக் காலமாகத் தன்மான (சுயமரியாதை) இயக்கம் செய்தது என்னவென்று பார்த்தால் சிறிது படிப்பு-பல பதவி, பணிகளைப் பெற நேர்ந்ததோடு, அரசியலின் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல், குமுகாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்கு வலுப்பெற்று விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே, நாம் சட்டத்தைப்பற்றி அச்சப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும் உரிமைத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துக்கொண்டு முன் வரவேண்டியது: ஒவ்வொரு தமிழனுக்கும் தேவையான செயல் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமைத் தமிழ்நாடு, எனது நோக்கம் என்ற சொற்களை ஒவ்வொருவரும் கொள்கை (இலட்சிய)ச் சொல்லாகக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். பதினாயிரக் கணக்கில் மார்பு வில்லைகளுக்குக் கட்டளை கொடுத்து அணியம் செய்து, மக்களுக்குத் தர ஆசைப்படுகிறேன், பொது மக்களுக்கும் இதுவே கொள்கைச் சொல்லாக (கூப்பாடாக) இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

பொது மக்களே! இளைஞர்களே!!
பள்ளி, கல்லூரி மாணவர்களே! மாணவிகளே!
உறுதி கொள்ளுங்கள்!
உறுதி கொள்ளுங்கள்!!
உறுதி கொள்ளுங்கள்!!!

—ஈ. வெ. இராமசாமி,

(தந்தை பெரியார் பிறந்த நாள், விழா மலர் 95.
(17 – 9 – 1973)

வெளியீடு: "சுதந்திரத் தமிழர் கட்சி"
2, தனிநாயகம் வீதி, துணை ஆட்சித்
தலைவர் குடியிருப்பு, மதுரை-20.

மலேசிய அன்பர் மடல்:

தமிழகத் தலைவர்களே, தமிழ் நாட்டை அமையுங்கள்!

தமிழ்நிலத்தைச் சேர்ந்த அனைவருக்கும் கோலாலம்பூர் சுப. சிதம்பரம் வணக்கம்.

இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணா நோன்பு இருப்பதும் அழித்தொழிக்கப்படவேண்டிய நாணயமற்றவர்களிடம் மண்டியிட்டு வேண்டுகோள் கொடுப்பதும்- மடமை மட்டுமல்ல, அரசியல் பகட்டு விளம்பரச் Stunt) செயல்கள்; கண்கட்டு வேடிக்கைகள்! இவையும் இந்தி அழிப்பு முதலியவையும் நமக்கு வீணானவை. மக்களுக்கு வீண் தொல்லை, பொருளில்லா இழப்பு, அவமானம்...நம்மைப் பார்த்து உலகமே சிரிக்கிறது! இரக்கம் ஆதரவு இல்லை... ஏன்?

ஆத்திரேலியாவின் பூர்வகுடி மக்கள் அனைவரும் முழுக்க முழுக்க தமிழர்கள். இவ்வுண்மை உணர்த்தப்பட்டு அவர்கள் நம் தேன்தமிழை நன்கு கற்க வழிவகைகள்...உடனே தேவை.

என் கருத்து: உலகெங்குமுள்ள 9 கோடிக்கும் அதிகமான தமிழர்கள் உடனே முனைந்து பொருள் திரட்டி தமிழர் வானூர்திப் படையை உருவாக்கிக் கொழும்பைத் தாக்கி இலங்கை முழுவதையும் கைப்பற்றித் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும், உலக ஒன்றிய நாடுகள் நிறுவனத்தையும் (ஐ.நா. வையும்) அனைத்து நாடுகளையும் அணுகித், தமிழ்நாடு பாண்டிச்சேரி, அந்தமான் ஆகியவற்றைத் தனியே பிரித்துத் தனித் தமிழர் நாடு ஆக்க வேண்டும். நம் முகாமைத் தலைவர்கள் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுபோல் இங்கேயே இராமல், வெளிநாடுகள் சென்று இப் பணிகளை நிறைவு செய்ய ஆவன தொடங்க வேண்டும். தமிழ் இளைஞர்களே! தமிழ்ச் செல்வர்களே இன்றே விழித்தெழுந்து பணி தொடங்குங்கள். ஆந்தல அரசியல் தலைவர்களை நம்பாதீர்கள். பச்சோந்திகளை நம்பாதீர்கள். நம்மையே நமக்குதவி. அன்புத் தமிழ் ஊழியன்

— சுப. சிதம்பரம், மலேசியா.

தமிழர் பழக்கவழக்கங்கள் பற்றி சோவியத்துத் தமிழறிஞர் நூல்

சோவியத்துத் தமிழறிஞரான விதாலி பூர்ணிகா தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவை பற்றி எழுதியுள்ள புதிய நூலை, மாசுகோ "நௌகா" பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். "பிறப்பு முதல், இறப்பு வரை-தமிழர் பற்றிய குறிப்புகள்" என்பது இந்த நூலின் தலைப்பு.

தென் இந்திய மொழிகளை, குறிப்பாகத் தமிழை, சோவியத்து ஒன்றியத்தில் ஆழ்ந்து படிப்பது, 1950 ஆம் ஆண்டுகளில் தொடங்கினதாக இந்த நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு முதலியவை பற்றி சோவியத்து ஒன்றியத்தில் கொள்கை அடிப்படையாகவும், நடைமுறை வழியாகவும் பெருமளவில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. திராவிடத் தேசிய இனங்களின் கடந்த கால வரலாற்றுக்கும், நிகழ்கால வரலாற்றுக்கும் இடையே உள்ள இடைவெளியை இட்டு நிரப்ப சோவியத்து ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்கின்றனர். தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், மத நம்பிக்கைகள் முதலியவை பற்றி இந்த நூலில் விதாலி பூர்ணிகா விளக்கி, இந்த ஆராய்ச்சிக்குப் பங்காற்றியிருக்கிறார்,

நூலாசிரியர் தென் இந்தியாவுக்குச் செலவு மேற்கொண்ட பொழுது திரட்டிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த நூலை எழுதியிருக்கிறார். தமிழர்களின் தோற்றம் பற்றி நூலாசிரியர் சில கருதுதல்களைக் கூறியிருக்கிறார். ஆரியர்கள் நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கிப் பண்பாடு கலை வளர்க்கத் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, இந்தியாவில் திராவிடர்கள் வாழ்ந்து வந்ததாக அவர் கருத்துத் தெரிவிக்கிறார்.

தமிழர் பெயர்களின் தொடக்கம், நலந்தரும் எண்கள், கேடுதரும் எண்கள், திருமணச் சடங்குகள், இறுதிச் சடங்குகள், ஐந்துறுப்பியம், (பஞ்சாங்கம்) திருவிழாக்கள் முதலியவை பற்றி ஒரு தனிப்பகுதியே எழுதியிருக்கிறார்.

விடுதலை பெறுவது முதல் வேலை

பர்மா தமிழர் தலைவர் தமிழ்த்திரு. டி. எசு. மணி

இளமையில் :

சின்னஞ் சிறு அகவையில் வீட்டைத் துறந்து, தமிழகத்தை விடடுப் பர்மாவிற்கு வந்த, அஃதாவது, வீட்டைத் துறந்து - பெற்றோரை - சுற்றத்தார்களைக் குடும்ப நலததை மறந்து, துறவியாக வாழ்ந்து வந்த ஐயா மணி அவர்களுக்குத் 'தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் தமிழ் மக்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது, தந்தை பெரியார் அவர்களால் அக்காலத்தில வெளியிடப்பட்ட, 'குடியரசு', 'விடுதலை' போன்ற இதழ்களைத் தொடர்ந்து படித்ததுதான' என்று இன்றும் பெருமையாக கூறிக் கொள்கிறார்கள்.

இயக்கத் தொடர்பு :

1931 ஆம் ஆண்டில் (பர்மா நாட்டில்) தந்தை பெரியார் சீர்திருத்தக் கருத்துகளை ஆதரித்து, நிறுவப்பட்டுச் செயலாற்றி வந்த பர்மா தன்மான இயக்கத்தில், டி. எசு. மணி அவர்கள் 1935 ஆம் ஆண்டு உறுப்பாண்மை பெற்று, இயக்கத் தோழர்களுடன், பட்டி தொட்டிகளுக் கெல்லாம் சென்று, தமிழர்களிடையே சாதி ஒழியவேண்டும், தீண்டாமைப் பேய் அகலவேண்டும், தமிழர்களின் கோயில்களில் உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்று மாபெரும் எதிர்ப்புகளுக் கிடையே, சாவின் உச்சியில் நின்று பகுத்தறிவுக் கருத்துரைகளைப் பரப்பித் தமிழர்களைத் திருத்தி வழிகாட்டிய பெருமகனார் ஐயா மணி அவர்கள்.

இரண்டாவது உலகப் போர் :

பர்மா தன்மான இயக்கத்தின் மூலம் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் 'விதி'யை நம்பும் நம்மினத் தமிழ் மக்களிடையே சீர்திருத்தக் கருத்துகள் பரவப் பணியாற்றி வந்த நேரத்தில், 1944 ஆம் ஆண்டு, பர்மா நாட்டின்மீது சப்பானிய வானூர்திகள் குண்டு வீசிப் படை எடுத்ததால் நாடு தலைகீழ் நிலையாகிவிட்டது.

மீண்டும் நமது பண்பாட்டு இயக்கங்கள் தோற்றம் :

உலகப் போர் முடிவிற்குப் பின், 1946 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, தென்னிந்திய உணவு விடுதலைத் தொழிலாளர் சங்கம், 1950 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பர்மா திராவிட முன்னேற்றக் கழகம், 1952 - ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அகில பர்மா தமிழர் சங்கம் போன்ற நிறுவனங்களை அமைத்து, நமது பண்பாடு, தமிழ் மொழி, கலை வளரக் காரணமாக இருந்த, நல்லுயிர்களில ஐயா டி. எசு. மணி அவர்களும் ஒருவராக இருந்து, மாவட்டம் அளவிலும், புற ஊர்களான சிற்றூர்-பேரூர்களிலும் தமது சுற்றுலாவின் போதெல்லாம வேளாண்மைத் தொழில் செய்யும் தமிழ் மக்களிடையே, தமிழ், இன, மொழி உணர்வை வளர்க்கும் பல நிறுவனங்களை நிறுவி, பர்மா நாட்டில் வாழும் தமிழர்கள் அநத நாட்டைத் தமது சொந்தத் தாய் நாடாக மனத்திலிருத்தி வாழ்ந்திடல் வேண்டுமென தீவிரமாகக் கருத்துப் பரப்புதல் செய்து வந்தார். இன்றும் செய்து வருகிறார் டி. எசு. மணி அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

குருவிடம் நல்வாழ்த்துப் பெற்றவர் :

1954 ஆம் ஆண்டு, புத்த சமய மாநாட்டையொட்டித தந்தை பெரியார் அவர்கள், பர்மா நாட்டிற்கு வந்தபோது, இரங்கூன் பார் வீதியில் அன்று அமைந்து செயல்பட்டு வந்த, தென்னிந்திய உணவு விடுதித் தொழிலாளர் சங்க பணிமனைக்குத் தமது பேராசான் தலைவர் பெரியார் அவர்களை அழைததுப் பர்மா தன்மான இயக்கத் தோழர்கள் சார்பாக விருந்தோம்பலும், பாராட்டுக் கூட்டமும் நடத்திக் குருவிடம் நல்வாழ்த்துப் பெற்றவர், பர்மா தன்மான இயக்கத் தலைவர் ஐயா மணி அவர்கள்.

அவரது வாழ்நாளில் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சி:

1953 ஆம் ஆண்டு, இடையில் பர்மாவிலிருந்து, தமிழகம் சென்று அறிஞர் அண்ணா அவர்களையும் நாவலர். இரா. நெடுஞ்செழியனையும் சந்தித்துப் பர்மாத் தமிழர்கள் தமிழகத்தில் ஒரு காலும், பர்மாவில் ஒரு காலுமாக வைத்துக்கொண்டு வாழ்ந்து வருவதால், எதிர்காலத்தில் பர்மாத் தமிழர்கள் இடர்ப்படுறலாம். இன்று பர்மாத் தமிழர்களின் தலைவர்களாகத் தொண்டாற்றி வரும் பெரியார்களிடம் காலம் தான் தேசிய இனத்தை உருவாக்குகிறது என்ற தொலை நோக்க எண்ணங்கள் கிடையாது என்று தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டியதோடு தி. மு. கழகம் நடத்திய பல பொதுக் கூட்டங்களிலும் இது குறித்துப் பேசி விட்டு, அதே ஆண்டு பர்மாவிற்குத் திரும்பினார்.

தமிழ்த் தாயின் திருவருளால்
இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார் :

வெள்ளைக்காரர்கள் பர்மாவை ஆண்டுவந்த அக்காலத்தில் தொடங்கப்பெற்ற, பர்மாத் தன்மான இயக்கத்தில் உறுப்பாண்மை பெற்று அடி, உதை, வெட்டு, சிறை போன்ற கொடுமைகளை எல்லாம் தூசாக மதித்துப் பகுத்தறிவுக் கொள்கையைப் பர்மா வாழ் தமிழர்களிடையே பரப்பி வந்த, விரல்விட்டு எண்ணக்கூடிய நல்லுயிர்களில், இன்று ஐயா மணி ஒருவர் மடடுமே தமிழ்த்தாயின் தனிப்பெரும் அருளால் நம்மோடு வாழ்ந்து வருகிறார்.

அமைதி பெறுகிறார் :

18-9-85 ஆம் நாளுடன் 68-வது அகவை நிறைவு பெற்று, 69 வது அகவையில் அடியெடுத்து வைக்கும் தமிழர் தலைவர், தமிழ்த திரு. டி. எசு. மணி, அவர்கள், வளர்த்து விட்டவர்களாலேயே கடுமையாக, மிக இழிவாக எதிர்க்கப்பட்டும், கிடைத்த இடத்தில் சாப்பிட்டு, நினைத்த இடத்தில் படுத்துறங்கும் அவருக்கு மன அமைதியைத் தருவது, குமுகாயச் சீர்திருத்தப் பகுத்தறிவுக் கொள்கையிலிருந்து நழுவாதவர் என்ற முத்திரையோடு, பர்மாத் தமிழர்களிடையேயும் ஓரளவிற்கு உலகத் தமிழர்களிடையேயும் அறிமுகமானவராக இருப்பதை எண்ணி மன அமைதி பெறுகிறேன் என்று அடிக்கடி கூறிவரும் ஐயா மணி அவர்கள், மேலும் பல்லாண்டுகள் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

வளர்க உலகத் தமிழர்கள் உறவுகள்!

— கோ. இலே. காசிநாதன், இரங்கூன், பர்மா

பர்மா அன்பர் மடல் :

பர்மாவில் உள்ள தமிழர் நிலை!

பெரும் மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கு, வணக்கம்.

வெள்ளையர் பர்மா நாட்டை ஆட்சி புரிந்த காலத்தில் - 'தேசோபகாரி', 'சுதேச பரிபாலினி', 'ஊழியன', 'ரசிகரஞ்சனி', 'பாலபர்மா' 'பர்மா நாடு' 'தொண்டன்' 'மககள குரல்'—போன்ற பல நாளிதழ்களும், திங்கள், கிழமை வெளியீடுகளும் வெளிவந்து கொண்டிருந்தன, பர்மாவில்.

1948 விடுதலைக்குப் பின்னும் மூன்று நாளிதழ்கள் வெளிவந்தன. 1964-இல் பர்மாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் மேற்கண்ட மூன்று இதழ்களும் தடைசெய்யப்பட்டு விட்டன.

இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்ற எண்ணத்தொடு, வாழ்ந்துகொண்டிருந்த தமிழர் கூட்டம் இலவயக் கப்பலில் ஓடிவிட்டனர், தமிழகத்திற்கு!

அதன்பின் 1951-இல் நிறுவப்பெற்ற பர்மா திராவிட முன்னேற்றக் கழகம், 1952-இல் நிறுவப்பெற்ற, 'அகில பர்மா தமிழர் சங்கம்' மற்றும் அதன் சார்பு அமைப்புகளும், அவற்றின் தலைவர்களும் தொண்டர்களும் தமிழினக் குமுகாய மறுமலர்ச்சிக்கும், தமிழ்மொழி, கலை, நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், தமிழர்-பர்மியர் உறவிற்கும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

1967-ஆம் ஆண்டு நடைபெற்ற 'அகில பர்மா தமிழர் சங்க'த் தலைவர் தேர்தலில் ஓர் ஒப்போலை அதிகப்படியாகப் பெற்றுத்தலைவராகவந்த வி சுப்பிரமணி, அடுத்து, 1969-ஆம் ஆண்டும் தலைவருக்காகப் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்த சுப்பிரமணி வெற்றிபெற்ற (இராமச்சந்திரன்) தரப்பினரிடம் 'சங்க' ஆளுமையை ஒப்படைக்க மறுத்துத், தனக்கொரு கும்பலைச் சேர்த்துக்கொண்டு, பலவகைக் குற்றவியல் (கிரிமினல்), குமுகவியல் (சிவில்) குற்றங்களில் ஈடுபட்டு, மூன்றுமுறை சிறை சென்றும் திருந்தாமல், தமிழர்களிடையே பலவகையான குழப்பங்களை இன்று வரை, உண்டுபண்ணிவரும், சுப்பிரமணியனின் தவறான செயல்களைக் கண்டபலர், குறிப்பாக, இந்தியத் தூதுவரக அதிகாரிகளும், மாநகர், மாவட்டத் தமிழ்ப் பெரியார்களும் எடுத்த ஒப்புரவான முயற்சிகளை எல்லாம்கூட சுப்பிரமணியன் ஏற்க மறுத்து, இட்லர் போக்கில், ஆணவமாக நடந்து வருகிறார். இதனால் நிகழ்காலத்தில் பர்மா தமிழர்களிடையே மருந்துக்குக்கூட ஒற்றுமையை எதிர்பார்க்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற சூழ்நிலையில் 1983 பிப்ரவரி 10-ஆம் நாள் பர்மிய அரசு அதிகாரிகள், பர்மா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும், இலங்கையில் தனிநாடு கேட்டுப் போராடிவரும் தமிழ்ப் போராளிகளுடன் தொடர்பிருப்பதாகக் கருதி, ப.தி.மு.க. வைச் சார்ந்த தலைவர்களை அழைத்து உசாவிக் கழகத்தை உடனே மூடிவிட வேண்டும் என்று கட்டளையிட்டதன் பேரில், கழகம் மூடப்பட்டது.

மேலும் இந்த நாட்டின் அரசியல் சட்டப்படி புதிதாக இயக்கங்களை நிறுவிச் செயல்பட சட்டம் இடம் தராது. அதனால், நாங்கள் ஏற்பாடு செய்திருந்த 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்'தின் பர்மா நாட்டுக் கிளையை நிறுவிச் செயல்பட முடியாமல் போய்விட்டது.

இங்கு மதஉரிமை மட்டுமே உண்டு. அதனால் ஐயா டி எசு. மணி உள்பட நாங்கள், தமிழர்களுடைய சிவனிய, மாலியக் கோயில்கள் மூலம், நமது மொழி, பண்பாட்டை வளர்ப்பதென முடிவெடுத்துப் பர்மா அரசின் அனுமதியோடு அதிகார முழுமையாக இயங்கி வரும் 'அகில பர்மா இந்து மத்திய சபை' ஆளுமையர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

இப்பொழுது மேற்படி சபையின் தலைவராக இருக்கும் சி. சத்தியநந்தன் அவர்கள், தமிழார்வ முள்ளவராக இருப்பதால், அவரின் பெரும் முயற்சியில் 'அறங்காவலன்' என்ற திங்களிதழையும் வெளியிட்டுத் தமிழ்ப் பணியாற்றி வருகிறோம். மற்றவை அடுத்து எழுதுகிறேன். தங்களன்புள்ள,

— கோ. இலே. காசிநாதன், இரங்கூன்.

உலகில் மண் விடுதலைக்குப் போராடும் மக்களினங்கள்!

— வியனரசு —

"புரட்சியை முன் நின்று நடத்தக் கூடியவர்கள் யார்? கட்சிகள் இருந்தாலும்சரி, இல்லையானாலும் சரி எழுச்சியாளர்களும், பொதுமக்களுமே புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் வல்லமை பெற்றவர்கள். ஒரு முன்னணித் தலைமையின்றிப் புரட்சி என்பது வாய்ப்பாகாதுதான். ஆனால் அந்த முன்னணித் தலைமையானது பொதுவுடைமைக் கட்சிகளாக இருக்க வேண்டும் என்ற தேவை இல்லை.

— தலைவர் பிடல் காசுட்ரோ

1. தமிழீழம்

1948 வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்ற இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனம் ஆளும் இனமாகவும், மண்ணின் தொல்குடி மக்களாகிய நம் தமிழினம் ஆளப்படும் இனமாகவும் இருப்பதால் தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டும், மொழி புறக் கணிக்கப்பட்டும் வருவதால் எழுந்த சிக்கலால் ஏற்பட்ட இனக் கலவரங்களில் தமிழினம் கடுமையான கொடுமைகளுக்குள்ளான நிலையில்தான் தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுதலை கோரி அறவழியில் போராடிப் பார்த்துப் பயனளிக்காத நிலையில், ஆயிரக்கணக்கான தமிழின இளைஞர்கள் புரட்சி வழி விடுதலையை வென்றெடுக்கக் கருவியேந்திப் போராடி வருகிறார்கள்.

விடுதலை இயக்கங்களும் அதனதன் தலைவர்களும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (P.L.O.T.) உமாமகேசுவரன், தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E.) பிரபாகரன், ஈழ புரட்சி அமைப்பு (E.R.O.S.) பாலக்குமார், ஈழ மக்கள் புரட்சி வழி விடுதலை முன்னணி (E.P.R.L.F) பத்மநாபா, தமிழீழ விடுதலை இயக்கம் (T.E.L.O. சபாரத்தினம், இவ் ஐம்பெரும் தலைவர்களாலும் தமிழீழத்தை வென்றெடுப்பதும், தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்துவதும் உறுதி! உறுதி!!

2. சைப்ரசு தீவு :

நடுவண் தரைக்கடல் நடுவே உள்ள ஒரு சின்னஞ்சிறிய தீவுதான் சைப்ரசு இந் நாட்டின் நிலப்பரப்பளவோ 3,000 சதுர அயிர மாத்திரி (கிலோமீட்டர்) தான். இதில் வாழும் மக்கள் தொகை 6 இலக்கம்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன

1. பாவேந்தர் பாரதிதாசன் 14—00
2. இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு? 1—00
3. வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு) 1—50
4. சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும் 0—50
5. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் 2—25
6. தன்னுணர்வு 1—50
7. இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் 1—50

தொடர்பு கொள்ள :

மே/பா. தென்மொழி, சென்னை-5.

மக்கள் இணைந்தால்தான் மறுமலர்ச்சி ஏற்படும்!

தொடர்: 3.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

நம் அக்கை - தங்கைகள் தங்கள் கணவன் முன்னாலேயே கற்பழிக்கப்பட்டுக் கொன்று தூக்கி எறியப்படுகிறார்களாம் இலங்கையிலே! இதையெல்லாம் கேள்விப்பட்டும், இந்த முரட்டுச் சட்டைப் பிறவிகள், நம் தலையில் அமெரிக்கா குண்டு போடும் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் மனைவிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டால், இவர்கள் என்ன செய்வார்களோ?

தமிழ் இனமே! இப்படிப்பட்ட கோழைகளையும், கோமாளிகளையும் பெற்றுத் தமிழர்கள் என்று உலவ விட்டு உள்ளாயே! உனக்கு இதுவும் வேண்டும்-இன்னமும் வேண்டும் என்று கூறுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடிகின்றது?

அமெரிக்காவுக்கும்-இலங்கைக்கும், எவ்வகைப் படைத்துறை ஒப்பந்தமும் கிடையாது. அப்படியிருக்க, அமெரிக்கா எந்த அடிப்படையில் படையை இலங்கைக்கு அனுப்பும்?

அமெரிக்க மக்கள் குடியரசுப் பண்புள்ளவர்கள். அமெரிக்காவை ஆட்சி செய்யும் அரசு, தவறான வழியில் செல்லுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினால், அவர்கள் தங்கள் அரசைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள்.

உலக மக்கள் எல்லாரும் உரிமையுடன் வாழ வேண்டுமென்று விரும்புபவர்கள் அமெரிக்க மக்கள். அவர்கள் 35 இலக்கம் தமிழர்களைக் கொல்வதற்குத் தங்கள் படையை இலங்கைக்கு அனுப்ப இசையமாட்டார்கள்.

இரு நாடுகளுக்கும் படைத்துறை ஒப்பந்தம் எதுவும் இல்லாததால், இலங்கை அரசு கேட்டுக் கொண்டவுடன் அமெரிக்கப் படை வந்துவிடாது. இந்தியப் படை, இலங்கையில் இறங்கும் வரை, அமெரிக்க அரசு தனது படையை அனுப்பக்கூடிய வாய்ப்புக் கூறே கிடையாது.

இலங்கையிலுள்ள திரிகோணமலையில் இப்போது அமெரிக்கப்படை இருப்பதாகவும், நாம் இலங்கைக்குள் சென்றால், அவர்கள் போரில் இறங்குவார்கள் என்றும் கரடி விட்டுக் கொண்டிருக்கிறார்கள், தமிழர்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் கூட்டத்தினர்.

இந்து மா கடலிலுள்ள டிகோகார்சியா என்னும் தீவில் அமெரிக்கப் படை இருக்கின்றது. அங்கே உள்ள படைத்துறையினர் தங்கள் விடுமுறையில் களிப்புடன் ஓய்வெடுக்க அமெரிக்காவிற்குச் சென்று வருவது மிகவும் தொல்லையாக இருந்தது. ஆகவே, அருகிலேயே ஓர் இயற்கை எழில் மிகுந்த இடத்தைத் தேடினார்கள்.

உலகத்திலுள்ள இயற்கை எழில் மிகுந்த இடங்களில் ஒன்றாக, திரிகோண மலைப்பகுதி கருதப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியை அமெரிக்கப் படையினர் தங்கள் விடுமுறையைக் களிப்புடன் கழிக்கும் இடமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

முதலில் பாகித்தானிடமுள்ள காசுமீர் பகுதியைத் தேர்ந்தெடுத்துப் பாகித்தானிடம் இசைவு கேட்டார்களாம். காசுமீர் சிக்கல் இன்னும் தீராமல் இருப்பதால் அந்தப் பகுதி வேண்டாமென்று கூறி, பாகித்தான் திரிகோண மலைப் பகுதியைப் பரிந்துரை செய்ததாம். தங்கள் ஓய்வு நேரத்தைக் களியாட்ட இடமாகக் கழிக்க, அமெரிக்கப் படையினர் திரிகோண மலைப்பகுதிக்கு வருகிறார்கள். ஓய்வெடுக்க வருகின்ற அமெரிக்கப் படை வீரர்கள் போரில் இறங்குவார்கள் என்று கூறி ஒரு கூட்டம் தமிழ் மக்களை எப்படி ஏமாற்றுகிறது பார்த்தீர்களா?

∴ ∴ ∴

ஈழத் தமிழினமும், இந்தியத் தமிழினமும் வேறு வேறு இனங்களைச் சேர்ந்தன போலவும், ஈழத் தமிழினம் அழிக்கப்படுவதைப் பார்த்து, இந்தியத் தமிழினம் கவலைப்படத் தேவை இல்லாதது போலவும், தமிழகத்திலே கருத்துப் பரப்புதல் செய்து, ஒன்றுமறியாத தமிழ் மக்களை எப்படி ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது, ஒரு வஞ்சகக் கூட்டம்?

தமிழன் ஏமாறி இருந்தால், சோழ நாட்டுத் தமிழன் வேறு, பாண்டிய நாட்டுத் தமிழன் வேறு என்று பிரித்துக் கூறிக் கருத்துப் பரப்புதல் செய்து, இங்குள்ள தமிழினத்தையே இரண்டு படுத்திவிடக் கூடிய சொல்லாற்றல் படைத்த கூட்டமன்றோ, அது!

நம் தாயும், தங்கை-அக்கைகளும் கற்பழிக்கப்பட்டுச் சாகடிக்கப்படுவதைக் கேட்டும், அதைத் தடுக்க இயலாதவர்களாக நம்மை ஆக்கிவைத்திருக்கும் கூட்டமன்றோ, அது?

அண்ணா தமிழினத்தை ஒன்றுபடுத்தித் தமிழ்க் குமுகாயம் உயரப் பாடுபட்டார். அந்த ஒன்றுபட்ட தமிழர் ஆற்றலை இரண்டாக உடைத்து ஒன்றைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதன்றோ, அந்தக்கூட்டம். தமிழினத்திற்குப் பகையான செயல்களை அண்ணாவால் உருவாக்கப்பட்ட தமிழர்களைக் கொண்டே நிறைவேற்றிக் கொண்டிருக்கும் கூட்டமன்றோ, அது.

இந்தியா என்றும், இலங்கை என்றும் 36 ஆண்டுகளுக்கு முன்னால் தான் எல்லைக்கோடுகள் போடப்பட்டன. மக்களின் விருப்பத்திற்குத் தகுந்தபடி, நாடுகளின் எல்லைக்கோடுகள் மாறிக்கொண்டேயிருக்கும். உலக வரலாற்றில் எல்லைக் கோடுகளை மாற்றி அமைக்க 36 ஆண்டுகள் என்பது ஓர் எளிய பொதுவான குறுகிய காலமாகும்:

எல்லை, கோடுகளால் பிரிக்கப்பட்டு இருந்தாலும் ஈழத் தமிழும், இந்தியத் தமிழனும் உடன் பிறந்தவர்கள், ஓர் இன மக்கள். அவர்களை வேறுபடுத்திப் பிரித்து அழித்துவிட, எந்த வஞ்சகக் கூட்டம் முயன்றாலும் அதைத் தமிழர்கள் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். உண்மையைஉணர்ந்து செயல்படாவிட்டால், ஈழத்திலே மட்டுமன்று, இந்தியாவிலும் தமிழினம் அழிக்கப்பட்டு விடும்.

∴ ∴ ∴

தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, தன்னைத் தாக்க வந்தவர்களைக் கொல்வது கூட குற்றமன்று என்பது இயற்கையான சட்டம். இதை ஒவ்வொரு நாடும் தன்னாட்டுச் சட்டமாக வைத்துள்ளது.

ஓர் இனத்தை, ஒரு காட்டுமிராண்டி ஆட்சி அழிக்க முற்பட்டால் - அந்த இன மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தால, அதை அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களைக் காப்பாற்றிக் கொள்வது அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று.

இலங்கையிலே நமது தமிழ் இனம் அடிமைப் படுத்தப்பட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைக்கண்டு இந்தியத் தமிழர்கள் கொதித்து எழுந்துள்ளனர். ஆனாலும், இலங்கையில் நடக்கும் கொடுமைகள் ஒழிந்தபாடில்லை. தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றன.

இதைத் தடுக்கும் வழி என்ன? யார் நடவடிக்கை எடுக்கவேண்டும்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இனி என்ன செய்ய வேண்டும்? என்பன போன்ற கேள்விகள் கொதித்தெழுந்துள்ள தமிழ் மக்களின் நெஞ்சங்களைக் குத்திக் குதறிக் கொண்டிருக்கின்றன.

இந்த வினாக்களுக்குரிய விடை என்ன?

இதோ............!

இதைத் தடுக்கும் வழி என்ன?

இதைத் தடுக்கும் வழியை நம் புதியதாகவும் கண்டு பிடிக்கலாம், அல்லது இதுபோன்று முன்பு நடந்துள்ள நிகழ்ச்சிகளை ஆராய்ந்தும் நமது வழியை வகுத்துக் கொள்ளலாம்.

பங்களா தேசம் உருவாக்கப்பட்ட வரலாறு நமக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

1947 ஆம் ஆண்டு, ஆகத்து மாதம், 15 ஆம் நாள் இந்தியாவிற்குக் கொடுக்கப்பட்டது.

வெள்ளைக்காரர்களால் ஒரே நாடாக ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது இந்திய நாடு. அதைப் பாக்கித்தான், இந்தியா என்று இரண்டாகப் பிரித்து, இரண்டு தன்னாட்சி உரிமை நாடுகளாகக் கொடுத்துவிட்டு வெள்ளையர்கள் வெளியேறினார்கள்.

மேற்கு வங்கம், கிழக்கு வங்கம் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் ஒரே இனத்தைச் சேர்ந்த வங்காளி மக்கள்தாம் வாழ்கிறார்கள். ஆனாலும், மேற்கு வங்க மாநிலம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது; கிழக்கு வங்க மாநிலம் பாக்கித்தானுடன் சேர்க்கப்பட்டது.

கிழக்கு வங்க மாநிலத்தில் பெரும்பான்மையான மக்கள் இசுலாம் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால், அது பாகித்தானுடன் சேர்க்கப்பட்டது. அம் மாநிலத்திற்குக் கிழக்குப் பாக்கித்தான் என்ற பெயரும் சூட்டப்பட்டது. பாக்கித்தான் நடு மேற்கு பாகித்தான், கிழக்குப் பாகித்தான் என்ற இரு பகுதிகளைக் கொண்டதாக இருந்தது.

கிழக்குப் பாகித்தானிலுள்ள மக்களை, மேற்குப் பாகித்தானியர்கள் அடிமைப்படுத்தப் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் தலைதூக்கத் தொடங்கியது. பொருளியலில் கிழக்கு வங்க (கிழக்குப் பாகித்தான்) மக்களை, மேற்குப் பாகித்தானியர்கள் சுரண்டுகிறார்கள் என்ற கருத்துப் பரவத் தொடங்கியது. சம வாய்ப்புகளைக் கிழக்குப் பாகித்தானியர்கள் இழந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்து, கிழக்கு வங்க மக்களின் உள்ளங்களை வாட்டத் தொடங்கியது.

கிழக்கு வங்க மக்கள் தனி நாடு கேட்கத் தொடங்கினர். கிழக்கு வங்க அரசியலில் முசிபுர் இரகுமான் தலைமைப் பொறுப்பேற்றார்.

1970 ஆம் ஆண்டு, கிழக்கு வங்க மாநிலச் சட்டமன்றத்திற்கு நடந்த தேர்தலில், முசிபுர் இரகிமானின் கட்சி வெற்றிவாகை சூடியது. கிழக்குப் பாகித்தான் மாநில அமைச்சரவையை அமைக்க முசிபுர் இரகிமான் முயற்சி செய்தார். ஆனால், மேற்குப் பாகித்தான் ஆட்சியாளர்கள் அவரை ஆட்சி அமைக்கவிடவில்லை.

முசிபர் இரகிமானைச் சிறைப்பிடித்தனர். படைத்துறையைக்கொண்டு, கிழக்கு வங்கத்தை ஆட்சி செய்ய முற்பட்டார்.

கிழக்கு வங்க மக்கள் கொதித்தெழுந்தனர். மேற்குப் பாகித்தானின் படைத்துறை ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.

கிழக்கு வங்கத்திலுள்ள (பாகித்தான் பகுதிப்) தங்களின் வங்காள உடன்பிறந்தவர்கள் கொடுமைப் படுத்தப்படுவதைக் கண்டு, மேற்கு வங்கத்தில் (இந்தியப் பகுதியில்) வாழ்ந்து கொண்டிருந்த வங்காள மக்கள் வீறுகொண்டு எழுந்தனர்.

கிழக்கு வங்காளம் வேறுநாட்டைச் சேர்ந்தது என்று பழைமை பேசிக் கொண்டிருக்கவில்லை. தங்கள் கிழக்கு வங்க உடன்பிறந்தவர்களைக் காப்பாற்ற, இந்தியப் படையை நடுவண் அரசு அனுப்ப வேண்டுமென்று வரட்டுக் குரல்களை மட்டும் எழுப்பிக் கொண்டிருக்கவில்லை. செயலில் இறங்கினார்கள்.

(தொடரும்)

மண் விடுதலைக்குப் போராடும் . . .

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதில் ஓர் இலக்கத்துப் பத்தாயிரம் பேர் துருக்கியச்சிறுபான்மை இனத்தவராகவும், 4 இலக்கத்துத் தொண்ணூற்று ஆயிரம் மக்கள் கிரேக்கப் பெரும்பான்மை இனமாகவும் இருப்பதால், இவர்களே ஆளும் இனத்தவர்களாக இருக்கிறார்கள். இதனால் சிறுபான்மை—இனமான துருக்கி இன மக்களின் மொழி புறக்கணிப்படுவதுடன், கல்விவேலைவாய்ப்புகளிலும் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். இவற்றை எதிர்த்து அறவழியில் போராடிப் பார்த்த துருக்கி இனத்தவர்கள் முடியாத காலகட்டம் வந்தவுடன் தனிநாடு கேட்டுப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் போராட்டக்காரர்களை மிக்க கொடுமையான முறையில் தாக்கிச் சிறைகளில் அடைத்துத் துன்புறுத்தினார்கள்.

இதைக் காரணம் காட்டி 19 இசுலாமிய துருக்கி நாடுகள் சைப்ரசு மீது போர் தொடுக்கப்போவதாக அறிவித்து உலக ஒன்றியப் பேரவையை உடனடியாகத் தலையிடுமாறு வற்புறுத்தினார்கள். இதன் விளைவாக, உ.ஒ.பே.யின் அமைதிப்படை ஒன்று சைப்ரசுக்கு அனுப்பப்பட்டு, இடைக்காலத் தீர்வாக வடக்குத் துருக்கி சைப்ரசு என்னும் நிலப்பரப்பை அறிவித்துக் கிரேக்கர்கள் துருக்கியர்களின் நிலங்களைக் கைப்படுத்துவது தடுத்து நிறுத்தப்பட்டது. அமைதி முறையில் தீர்வுகாணத் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டுவருகின்றன. தனிநாடு கேட்டுப் போராடி வருகிறவர்களும் தொண்டர்களும்தொடர்ந்து போராடிவருகிறார்கள். விரைவில் தனிநாடு மலரும் என்று துருக்கி இன மக்கள் மார்தட்டி நிற்கிறார்கள். (தொடரும்)

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்;
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 66] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்: பெறுநர்.
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை—5

திரு/திருவாட்டி

தால்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக்
கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5